**ஜூலை – 28**

# TNPSC துளிகள்

- ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) தடைகள் காரணமாக அர்காடி ட்வோர்கோவிச் பதவியிலிருந்து விலகியதையடுத்து, சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பின் (FIDE) இடைக்காலத் தலைவராக முன்னாள் உலக சதுரங்க சாம்பியன் விஸ்வநாதன் ஆனந்த் பொறுப்பேற்றுள்ளார்.
- ஹைதராபாத்தை சேர்ந்த பாணினியன் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனமானது, இந்தியாவின் முதல் தனியார் துறை டர்போஃபேன் (turbofan) பொறி இயந்திர மேம்பாட்டுத் திட்டமான யந்தூர் (Yantur) என்பதை வெளியிட்டது.
    - 4.5 கிலோநியூட்டன் (kN) திறன் கொண்ட இந்த டர்போஃபேன் பொறி இயந்திரமானது Svayatt L1 நீண்ட தூரம் தன்னிச்சையாக இயங்கக்கூடிய சீர்வேக எறிகணைத் தளத்திற்காக உருவாக்கப்படுகிறது.
- Sarbat.AI முன்னெடுப்பின் கீழ், 1 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான பள்ளிப் பாடத் திட்டத்தில் செயற்கை நுண்ணறிவை (AI) ஒரு முக்கியப் பாடமாக அறிமுகப்படுத்திய இந்தியாவின் முதல் மாநிலமாக பஞ்சாப் உருவெடுத்துள்ளது.
    - டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்பத் திறன்களுடன் கூடிய, செயற்கை நுண்ணறிவு (AI) குறித்த அறிவும் புதுமைப் புனைவு சார்ந்த அணுகுமுறையும் கொண்ட ஒரு மாணவர் சமூகத்தை உருவாக்குவதை இந்த முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மாட்ரிட் மற்றும் அவிலா மாகாணங்களில் ஏற்பட்ட கடுமையான காட்டுத்தீ காரணமாக ஸ்பெயின் நாடு முதல் முறையாக தேசிய அவசர நிலையை அறிவித்து உள்ளது.
    - 2026 ஆம் ஆண்டில் ஸ்பெயினில் 100,000 ஹெக்டேருக்கும் அதிகமான நிலங்கள் எரிந்துள்ளன, மேலும் காட்டுத்தீ காரணமாக 13 இறப்புகள் பதிவாகியுள்ளன.
- 'செயற்கை நுண்ணறிவு (AI) குறித்த முதல் அறிவியல் அறிக்கை' என்பது, ஐக்கிய நாடுகள் சபையின் (UN) ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட, செயற்கை நுண்ணறிவு குறித்த சுயாதீன சர்வதேச அறிவியல் நிபுணர் குழுவால் தயாரிக்கப்பட்ட ஒரு முதற்கட்ட அறிவியல் மதிப்பீடாகும்.
    - செயற்கை நுண்ணறிவு அறிவியல் முன்னேற்றங்கள்; சுகாதாரம், கல்வி மற்றும் வேளாண்மைத் துறைகளில் அதன் பயன்பாடுகள்; பொருளாதார விளைவுகள்; பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் மீதான தாக்கங்கள்; மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம்; கலாச்சாரம் மற்றும் தனிநபர் நல்வாழ்வு; அத்துடன் நிர்வாகம் மற்றும் நம்பகத்தன்மை ஆகியன இவ்வறிக்கையின் 7 கருத்துருக்களாகும்.
- சேலம், கொண்டப்பநாயக்கன்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியானது, தமிழ்நாட்டில் ISO 9001:2015 சான்றிதழைப் பெற்ற முதல் அரசுத் தொடக்கப் பள்ளி ஆனது.
    - கொண்டப்பநாயக்கன்பட்டியில் அமைந்துள்ள 71 ஆண்டுகள் பழமையான இந்த ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, இம்மாவட்டத்தில் இத்தகைய அங்கீகாரத்தைப் பெறும் முதல் அரசுத் தொடக்கப் பள்ளியாகும்.

# தேசியச் செய்திகள்

## தேசியக் கௌரவ அவமதிப்புத் தடுப்பு (திருத்த) மசோதா, 2026

- தேசியக் கௌரவ அவமதிப்புத் தடுப்பு (திருத்த) மசோதா, 2026, மத்திய உள்துறை அமைச்சரால் மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.
- இந்த மசோதாவானது, தேசியப் பாடல் (வந்தே மாதரம்) என்பதை அதன் பாதுகாப்பின்

கீழ் சேர்ப்பதன் மூலம், 1971 ஆம் ஆண்டின் தேசியக் கௌரவ அவமதிப்புத் தடுப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய முற்படுகிறது.

- ❖ தேசியக் கொடி, அரசியலமைப்பு மற்றும் தேசிய கீதத்தைப் போன்று தேசியப் பாடலுக்கும் சட்டப்பூர்வ பாதுகாப்பை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- ❖ தேசிய கீதம் அல்லது தேசியப் பாடலைப் பாடுவதை வேண்டுமென்றே தடுப்பவர்கள் அல்லது அத்தகைய கூட்டங்களுக்கு இடையூறு செய்பவர்களுக்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை, அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கும் தண்டனையை இந்த மசோதா முன்மொழிகிறது.
- ❖ வந்தே மாதரம் பாடலானது 1875 ஆம் ஆண்டில் பங்கிம் சந்திர சாட்டர்ஜியால் இயற்றப் பட்டு, பின்னர் அவரது 'ஆனந்தமடம்' (1882) என்ற நாவலில் வெளியிடப்பட்டது.
- ❖ ஜன கண மன பாடலுக்கு இணையான அந்தஸ்து வந்தே மாதரம் பாடலுக்கும் வழங்கப் பட வேண்டும் என்ற டாக்டர் ராஜேந்திர பிரசாத்தின் அறிக்கையை (1950 ஆம் ஆண்டு ஜனவரி 24) இந்த மசோதா குறிப்பிடுகிறது.





## இந்தியாவின் நிறுவப்பட்ட காற்றாலை மின் உற்பத்தித் திறன் 2026

- ❖ 2026 ஆம் ஆண்டு ஜூன் 30 நிலவரப்படி, இந்தியாவின் நிறுவப்பட்ட காற்றாலை மின் உற்பத்தித் திறன் 57,443 மெகாவாட் (MW) ஆக உயர்ந்துள்ளது.
- ❖ 2025–26 ஆம் நிதியாண்டில் காற்றாலை மின் உற்பத்தி 106 பில்லியன் அலகுகளை எட்டியது.
- ❖ சீனா, அமெரிக்கா மற்றும் ஜெர்மனிக்கு அடுத்தபடியாக, காற்றாலை மின் உற்பத்தித் திறன் நிறுவலில் இந்தியா உலகளவில் தனது நான்காவது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது.
- ❖ இது உலகக் காற்று ஆற்றல் சபையின் (GWEC) 2026-ஆம் ஆண்டிற்கான அறிக்கையின் படி தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ❖ மாநில வாரியான தரவுகளின்படி, 16,086 மெகாவாட் நிறுவப்பட்ட காற்றாலை மின் உற்பத்தித் திறனுடன் குஜராத் மாநிலம் தொடர்ந்து முன்னிலையில் உள்ளது; அதைத் தொடர்ந்து தமிழ்நாடு (12,273 மெகாவாட்), கர்நாடகா (8,896 மெகாவாட்), மகாராஷ்டிரா (6,318 மெகாவாட்) மற்றும் ராஜஸ்தான் (5,516 மெகாவாட்) ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- ❖ புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் 'தானியங்கி வழிமுறை' மூலம் 100% நேரடி அந்நிய முதலீடு (FDI) அனுமதிக்கப்படுகிறது.

- ❖ தூய எரிசக்தி முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில், தகுதியுள்ள சூரியசக்தி மற்றும் காற்றாலை மின் திட்டங்களுக்கு மாநிலங்களுக்கு இடையிலான மின் கடத்திக் கட்டணங்களை (ISTS charges) அரசு ரத்து செய்துள்ளது; மேலும், அறிவிக்கப்பட்ட காலக்கெடுவுக்குப் பிறகு செயல்பாட்டுக்கு வரும் திட்டங்களுக்குப் படிப்படியாக மாறுபடும் கட்டண முறையையும் அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ 2029–30 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கான 'புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் கடமை' (RPO) மற்றும் 'புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நுகர்வுக் கடமை' (RCO) ஆகியவற்றிற்கான இலக்கு வரைபடத்தையும் அரசு அறிவித்துள்ளது.
- ❖ 'ஆற்றல் பாதுகாப்புச் சட்டம், 2001'-இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நுகர்வோருக்குப் பொருந்தக்கூடிய RCO, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நுகர்வை கட்டாயமாக்குவதுடன், பரவலாக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களிலிருந்து குறிப்பிட்ட அளவிலான கொள்முதலை மேற்கொள்வதையும் உள்ளடக்கியுள்ளது.




## இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திறன்




- ❖ இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திறன் 288 ஜிகாவாட் (GW) ஆக உள்ளது.
- ❖ 2014-ஆம் ஆண்டு முதல் இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திறன் கிட்டத் தட்ட நான்கு மடங்கு அதிகரித்து 288.58 ஜிகாவாட்டை எட்டியுள்ளது.
- ❖ 2014-ஆம் ஆண்டில் 76.38 ஜிகாவாட்டாக இருந்த இத்திறன், 2026 ஆம் ஆண்டு ஜூன் 30


நிலவரப்படி கிட்டத்தட்ட நான்கு மடங்கு அதிகரித்துள்ளது.

❖ நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனில் சூரிய ஆற்றல் 162.15 ஜிகாவாட் அளவோடு மிகப்பெரிய பங்கைக் கொண்டுள்ளது.

❖ இதனைத் தொடர்ந்து காற்றாலை ஆற்றல் (57.44 ஜிகாவாட்), நீர்மின் ஆற்றல் (57.24 ஜிகாவாட்) மற்றும் உயிரி ஆற்றல் (11.75 ஜிகாவாட்) ஆகியவை உள்ளன; இதில் 8.78 ஜிகாவாட் அணுசக்தித் திறனும் அடங்கும்.

❖ புதைபடிவ எரிபொருள் சாராத மின் உற்பத்தித் திறனில் இந்தியாவின் மொத்த நிறுவப்பட்ட திறன் 297.36 ஜிகாவாட்டை எட்டியுள்ளது.

## இந்தியாவில் அதிக மருத்துவப் படிப்பு இடங்கள்




| | STATE | MBBS SEATS | | STATE | MBBS SEATS |
|---|---|---|---|---|---|
| 1 | Karnataka | 15,395 | 18 | Puducherry | 1,780 |
| 2 | Uttar Pradesh | 14,000 | 19 | Jammu & Kashmir | 1,675 |
| 3 | Tamil Nadu | 13,999 | 20 | Jharkhand | 1,500 |
| 4 | Maharashtra | 13,099 | 21 | Uttarakhand | 1,475 |
| 5 | Telangana | 10,250 | 22 | Delhi | 1,415 |
| 6 | Rajasthan | 8,080 | 23 | Himachal Pradesh | 871 |
| 7 | Gujarat | 7,750 | 24 | Manipur | 550 |
| 8 | Andhra Pradesh | 7,465 | 25 | Tripura | 500 |
| 9 | West Bengal | 7,200 | 26 | Meghalaya | 250 |
| 10 | Madhya Pradesh | 6,020 | 27 | Goa | 250 |
| 11 | Kerala | 5,704 | 28 | Chandigarh | 200 |
| 12 | Bihar | 4,160 | 29 | Sikkim | 200 |
| 13 | Haryana | 2,960 | 30 | Dadra & Nagar Haveli and Daman & Diu | 177 |
| 14 | Odisha | 2,950 | 31 | Andaman & Nicobar Islands | 114 |
| 15 | Chhattisgarh | 2,925 | 32 | Arunachal Pradesh | 100 |
| 16 | Assam | 1,875 | 33 | Mizoram | 100 |
| 17 | Punjab | 1,850 | 34 | Nagaland | 100 |

❖ இந்திய மாநிலங்களிலேயே கர்நாடகா அதிகபட்சமாக 15,395 எம்பிபிஎஸ் (MBBS) இடங்களைக் கொண்டு முதலிடத்தில் உள்ளது.


❖ உத்தரப் பிரதேசத்தில் மொத்தம் 88 மருத்துவக் கல்லூரிகள் (51 அரசு மற்றும் 37 தனியார்) உள்ளன; இவற்றில் 14,000 இடங்கள் உள்ளன.

❖ மகாராஷ்டிராவில் 84 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன, அவற்றில் 13,099 இடங்கள் உள்ளன.

❖ தமிழ்நாட்டில் 78 மருத்துவக் கல்லூரிகள் மற்றும் 13,999 மருத்துவப் படிப்பு இடங்கள் உள்ளன.

- கர்நாடகாவில் உள்ள மருத்துவக் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை இந்த ஆண்டு 75-ஆக உயர்ந்துள்ளது.
- இதில் 24 அரசு மருத்துவக் கல்லூரிகளும் 51 தனியார் மருத்துவக் கல்லூரிகளும் அடங்கும்.

## அப்துல் ஹமீத் எதிர் ராஜஸ்தான் அரசு




- ராஜஸ்தானின் தௌசாவில் 1996-ஆம் ஆண்டு நடந்த சம்லேட்டி பேருந்து குண்டுவெடிப்பு வழக்கில், டாக்டர் அப்துல் ஹமீதுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை, அப்துல் ஹமீத் எதிர் ராஜஸ்தான் அரசு வழக்கில் உச்ச நீதிமன்றம் (SC) ரத்து செய்தது.
- அவருக்குப் பயனுள்ள சட்டப் பிரதிநிதித்துவம் மறுக்கப்பட்டதால், நியாயமான விசாரணைக்கான அவரது அரசியலமைப்பு உரிமை மீறப்பட்டு, விசாரணை அடிப்படையில் செல்லாததாகிவிட்டது என்று உச்ச நீதிமன்றம் கருதுகிறது.
- ஒரு வருடத்திற்குள் புதிய (டி நோவோ) விசாரணையை முடிக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.
- குற்றவியல் நீதி நிர்வாகம் என்பது, தண்டனைகளைப் பெறுவதை மட்டும் சார்ந்தது அல்ல, மாறாக நடைமுறை நியாயமானதாகவும், நேர்மையானதாகவும், பகுத்தறிவுள்ளதாகவும் இருப்பதை உறுதி செய்வதையும் சார்ந்துள்ளது.
- நியாயமான விசாரணைக்கான அரசியலமைப்பு உத்தரவாதம் "முற்றிலும் சமரசம் செய்ய முடியாதது மற்றும் நடைமுறை வசதிக்காக தியாகம் செய்யப்பட முடியாது" என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- சுயாதீனமான மற்றும் சட்டப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகளின் அடிப்படையில் "வேறுவிதமாக எட்டப்பட்ட ஒரு முடிவுக்கு உறுதி அளிக்க" மட்டுமே இதைப் பயன்படுத்த முடியும்.
- ஒரு கூட்டுக் குற்றவாளியின் வாக்குமூலம் ஆதாரப்பூர்வமான சான்று அல்ல என்பதை உச்ச நீதிமன்றம் மீண்டும் வலியுறுத்தியது.

- "நீதியின் உண்மையான அளவுகோல், பழிவாங்கும் வேகத்தில் இல்லை, மாறாக நிதானம் எனும் ஒழுக்கத்தில்தான் உள்ளது," என நீதிமன்றம் குறிப்பிட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியாவின் மீதான கட்டாயத் தொழிலாளர் சுங்கவரி - அமெரிக்கா

- விநியோகச் சங்கிலிகளில் கட்டாயத் தொழிலாளர் தொடர்பான கவலைகள் காரணமாக, இந்தியா மற்றும் 16 பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அமெரிக்கா 10% சுங்கவரியை விதித்துள்ளது.
- இந்த சுங்கவரியானது அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதியால் (USTR), 1974 ஆம் ஆண்டின் வர்த்தகச் சட்டத்தின் 301 வது பிரிவின் கீழ் அறிவிக்கப்பட்டது.
- கட்டாயத் தொழிலாளர்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் இறக்குமதிகளைத் தடைசெய்யும் வகையில் தனது வெளியுறவு வர்த்தகக் கொள்கையை இந்தியா திருத்தியமைத்ததைத் தொடர்ந்து, இது 10% என்ற குறைந்த சுங்கவரி அடுக்கில் வைக்கப்பட்டுள்ளது.
- இந்த நடவடிக்கையின் கீழ் மொத்தம் 60 பொருளாதார நாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன; 17 நாடுகள் 10% சுங்கவரியையும், 43 நாடுகள் 12.5% சுங்கவரியையும் எதிர்கொள்கின்றன.
- எரிபொருள், உரங்கள், மருந்துகள் மற்றும் தற்போதைய வர்த்தக ஒப்பந்தங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்கள் போன்ற சில பொருட்களுக்கு இந்த சுங்கவரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.




## சவூதி அரேபியா மீது ஏமன் தாக்குதல் 2026

- ஏமனின் ஹூதி கிளர்ச்சியாளர்கள் செங்கடலில் சவூதி அரேபியாவின் இரண்டு எண்ணெய் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தினர்.
- அமெரிக்கா–ஈரான் போரில் புதிய போர் முனை உருவாகும் அச்சுறுத்தல் நிலவிய நிலையில், அமெரிக்க இராணுவம் தொடர்ந்து 12-ஆவது இரவாக தாக்குதல்களை மேற்கொண்டது.
- ஈரான் குவைத் மீதும், அமெரிக்காவின் பிற பங்குதாரர்களான பஹ்ரைன் மற்றும் ஜோர்டான் மீதும் தாக்குதல் நடத்தியது.

- அரேபிய தீபகற்பத்தின் தெற்கு முனையில் அமைந்துள்ள 'பாப்-எல்-மண்டேப்' (Bab el-Mandeb) நீரிணை செங்கடலுக்கான நுழைவாயிலாக உள்ளது; இதன் வழியாகவே உலகின் வர்த்தகத்தில் சுமார் 12% நடைபெறுகிறது.
- கிழக்கு-மேற்கு குழாய் வழித்தடம் (பெட்ரோலைன்) - சவூதி அரேபியா முழுவதும் பரவியுள்ள இத்திட்டம், தினசரி பல மில்லியன் பீப்பாய் எண்ணெயை கிழக்கு மாகாணத்திலிருந்து செங்கடலில் உள்ள யான்பு (Yanbu) துறைமுகத்திற்கு கொண்டு செல்லும் திறன் கொண்டது.
- சவூதி அரேபியா உலகின் முன்னணி கச்சா எண்ணெய் ஏற்றுமதியாளராகத் திகழ்கிறது; இது நாளொன்றுக்கு 10 மில்லியன் பீப்பாய் எண்ணெயை உற்பத்தி செய்கிறது.
- ஹூதிகளுக்கு எதிரான கூட்டணியை சவூதி அரேபியா வழிநடத்துவதுடன், 2015-ஆம் ஆண்டில் ஏமன் மீது வான்வழி மற்றும் கடல்வழி முற்றுகையையும் விதித்தது.
- கிளர்ச்சியாளர்கள் தலைநகர் சனா (Sanaa) மற்றும் வடக்கு ஏமனின் பெரும்பகுதியைக் கைப்பற்றி, அரசாங்கத்தை நாட்டை விட்டு வெளியேற நிர்பந்தித்தபோது, 2014-ஆம் ஆண்டில் ஏமனில் உள்நாட்டுப் போர் தொடங்கியது.
- அதிகாரப்பூர்வமாக 'அன்சார் அல்லாஹ்' (Ansar Allah) என்று அழைக்கப்படும் ஹூதிகள், ஏமனில் செயல்படும் ஈரான் ஆதரவு பெற்ற, பலத்த ஆயுதமேந்திய அரசியல் மற்றும் ராணுவ அமைப்பாவர்.




# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் முதல் உள்நாட்டு எரிவாயு எதிர்கால ஒப்பந்தம்

- இந்தியாவானது தனது முதல் உள்நாட்டு தரவுகளின் அடிப்படையிலான இயற்கை எரிவாயு எதிர்கால ஒப்பந்தத்தை தேசியப் பங்குச் சந்தை (NSE) மூலம் தொடங்க உள்ளது.
- இந்த ஒப்பந்தமானது இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தால் (SEBI) அங்கீகரிக்கப்பட்டுள்ளது மற்றும் இது NATGASIND என்ற குறியீட்டின் கீழ் வர்த்தகம் செய்யப்படும்.
- இது இந்திய எரிவாயு பரிவர்த்தனை (IGX) குஜராத் (தாஹேஜ்) மைய விலையுடன் இணைக்கப்பட்டுள்ளது மற்றும் இது mmBtu (மில்லியன் பிரிட்டிஷ் வெப்ப அலகுகள்) என்று குறிப்பிடப்படுகிறது.

- இந்த ஒப்பந்தமானது ரொக்க-தீர்வு முறையில் நடைபெறும், இதன் வர்த்தக அலகு 250 mmBtu ஆகும். மேலும் இதன்படி எந்தவிதமான நேரடி எரிவாயு விநியோகமும் நடைபெறாது.
- தேசியப் பங்குச் சந்தை தீர்வகமானது தீர்வகப் பணிகள், சமரசத் தீர்வுகள், தினசரி சந்தை மாற்றங்களுக்கேற்ப சரிசெய்தல் மற்றும் மார்ஜின் வசூல் ஆகியவற்றை நிர்வகிக்கும்.





## சுற்றுச்சூழல் செய்திகள்

### மேட்டூர் பகுதியில் நீர்நாய் வாழிடம்

- சேலம் மாவட்டத்தின் மேட்டூர் அணை மற்றும் காவிரி ஆற்றுப் பகுதிகளில் அதிக அளவிலான மென்மையான உரோமம் கொண்ட நீர்நாய்கள் (லுட்ரோகேல் பெர்ஸ்பிசில்லாட்டா) இருப்பதை ஓர் ஆய்வு கண்டறிந்துள்ளது.
- இந்த உயிரினமானது பன்னாட்டு இயற்கை பாதுகாப்புச் சங்கத்தின் (IUCN) செந்நிறப் பட்டியலில் அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனம் என வகைப்படுத்தப் பட்டு உள்ளதுடன், 1972 வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் அட்டவணை I இன் கீழ் பாதுகாக்கப்படுகிறது.
- மென்மையான உரோமம் கொண்ட நீர்நாயானது தெற்காசியாவின் மிகப்பெரிய நீர்நாய் இனமாகும்.
- இது ஆரோக்கியமான நன்னீர்ச் சூழலியல் அமைப்புகளைப் பெரிதும் சார்ந்துள்ளது.
- நீர்நாய்கள் சிறந்த பகுதி-நீர்வாழ் வேட்டையாடும் விலங்குகள் ஆகும், அவை மீன்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் ஆற்று உணவுச் சங்கிலியின் சமநிலையைப் பராமரிப்பதில் முக்கியப் பங்காற்றுகின்றன.
- நீர்நாய்களின் இருப்பானது நல்ல நீரின் தரம் மற்றும் ஒப்பீட்டளவில் தலையீடு இல்லாத ஆற்று வாழிடங்களைக் குறிக்கிறது.
- மேட்டூர் அருகிலுள்ள காவிரி ஆற்றுப் பகுதியானது மணல் திட்டுகள், தாவரப் பரவல் மற்றும் நீர்நாய்களுக்கு அதிக அளவிலான மீன் இறைச்சி போன்ற சிறப்பான சூழல்களை வழங்குகிறது.
- வாழிட இழப்பு, மணல் கொள்ளை, மாசுபாடு மற்றும் மீன் வளங்களின் குறைவு

ஆகியவற்றின் காரணமாக இந்த இனம் முக்கியமாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளது.




## இஞ்சி அல்லியின் புதிய இனம் - ஹெடிச்சியம் சுபீன்கார்கியானம்





- இஞ்சி அல்லியின் புதிய இனமான 'ஹெடிச்சியம் சுபீன்கார்கியானம்' (Hedychium zubeengargianum) என்பதற்கு மறைந்த அசாம் இசை மேதை சுபீன் கார்க் அவர்களின் பெயரிடப்பட்டுள்ளது.

- மேகாலயாவின் ஷில்லாங்கில் உள்ள இந்தியத் தாவரவியல் ஆய்வு மையத்தால் (BSI) இந்த இனம் கண்டுபிடிக்கப்பட்டது.
- இசை மற்றும் இயற்கைப் பாதுகாப்பிற்கான சுபீன் கார்க் அவர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- மணம் கமழும், பாலேடு கலந்த வெள்ளை நிறப் பூக்களைக் கொண்ட இந்தத் தாவரம் 2018 ஆம் ஆண்டில் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இதற்கு முன்னதாக 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், அசாமின் மனாஸ் தேசியப் பூங்காவில் கண்டுபிடிக்கப்பட்ட 'ஆஸ்பெக்கியா சுபீன்கார்கியானா' (Osbeckia zubeengargiana) என்ற மற்றொரு புதிய தாவர இனத்திற்கும் அவரது நினைவாகப் பெயரிடப்பட்டது.

## வெள்ளை வயிற்று நாரையின் வாழிடத்திற்கு அச்சுறுத்தல்

- அருணாச்சலப் பிரதேசத்தின் லோஹித் ஆற்றில் முன்மொழியப்பட்டுள்ள 1,200 மெகாவாட் (MW) நீர்மின் திட்டமானது, மிகத் தீவிரமாக அழிந்து வரும் வெள்ளை வயிற்று நாரையின் (ஆர்டியா இன்சிக்னிஸ்) வாழிடத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது.
- அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள லோஹித் ஆற்றுப் படுகையானது இந்தியாவின் வெள்ளை வயிற்று நாரை இனங்களில் சுமார் 70%-ஐ ஆதரிக்கிறது, ஆனால் நாட்டில் தற்போது 6-9 நாரைகள் மட்டுமே எஞ்சியுள்ளன.
- இந்த உயிரினமானது 2007 ஆம் ஆண்டு முதல் IUCN செந்நிறப் பட்டியலில் மிக அருகி வரும் இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது மற்றும் இது 1972 வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் அட்டவணை I இன் கீழ் பாதுகாக்கப்படுகிறது.
- முன்மொழியப்பட்டுள்ள இந்த அணையானது ஆற்று நீரோட்டம், நீரின் கலங்கல் தன்மை மற்றும் ஆற்றங்கரைக் காடுகளை மாற்றி, பறவையின் உணவு மற்றும் கூடு கட்டும் வாழிடங்களைப் பாதிக்கலாம்.
- லோஹித் ஆற்றுப் படுகையில் வெள்ளை வயிற்று நாரை இருந்தாலும், இத்திட்டத்திற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டில் (EIA) அது சேர்க்கப்படவில்லை.




## வரலாற்று ரீதியான சரிவில் அமேசான் காட்டுத்தீ

- காடழிப்பு குறைதல் மற்றும் சாதகமான பருவநிலைகள் காரணமாக பிரேசிலின் அமேசான் மழைக்காடுகளில் ஏற்படும் காட்டுத்தீயானது, 1985 ஆம் ஆண்டில் பதிவுகள் தொடங்கியதிலிருந்து மிகக் குறைந்த அளவாகச் சரிந்துள்ளது.

- தாமதமான மழைக்காலம், குறைக்கப்பட்ட காடழிப்பு மற்றும் தீ பரவுவதைக் கட்டுப்படுத்திய சமூகக் கண்காணிப்பு அதிகரிப்பு ஆகியவை காட்டுத்தீ குறைவதற்கு உதவின.
- 2024 ஆம் ஆண்டில் அமேசானில் ஏற்பட்ட பெரும்பாலான தீ விபத்துகள் மனிதர்களால் தூண்டப்பட்டவை, இவை முக்கியமாக விவசாய நிலங்களைச் சுத்தம் செய்தல், காடழிப்பு மற்றும் சட்டவிரோதச் சுரங்க நடவடிக்கைகள் ஆகியவற்றால் ஏற்பட்டன.
- சாத்தியமான சூப்பர் எல் நினோ (Super El Niño) நிகழ்வானது நீண்டகால வறட்சியான பருவங்களை ஏற்படுத்துவதன் மூலம் எதிர்காலக் காட்டுத்தீ அபாயங்களை அதிகரிக்கக் கூடும் என்று அறிவியலாளர்கள் எச்சரித்துள்ளனர்.
- அமேசான் மழைக்காடானது உலகின் மிகப்பெரிய வெப்பமண்டல மழைக்காடாகும், இது ஒன்பது தென் அமெரிக்க நாடுகளில் சுமார் 6 மில்லியன் சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டுள்ளது, இதில் கிட்டத்தட்ட 60% பிரேசிலில் அமைந்துள்ளது.
- அமேசான் படுகை ஒரு முக்கியப் பல்லுயிர் வளம் செறிந்த பகுதியாகும், இது உலகின் அறியப்பட்ட வனவிலங்கு இனங்களில் சுமார் 10%-ஐக் கொண்டுள்ளது மற்றும் இது உலகளாவிய ஒரு முக்கியக் கார்பன் சேமிப்புப் பகுதியாகச் செயல்படுகிறது.
- பெருவின் ஆண்டிஸ் (Andes) மலைத்தொடரில் உற்பத்தியாகும் அமேசான் ஆறானது, நீர் வெளியேற்றத்தின் அடிப்படையில் உலகின் மிகப்பெரிய ஆறாகும், மேலும், நைல் நதிக்கு அடுத்தபடியாக உலகின் இரண்டாவது நீளமான ஆறாகும்.





# முக்கிய தினங்கள்

## மத்திய சேமக் காவல் படை தினம் 2026 - ஜூலை 27


- இந்தியாவின் உள்நாட்டுப் பாதுகாப்பைப் பேணுவதில் மத்திய சேமக் காவல் படையின் (CRPF) சேவை, தியாகம் மற்றும் பங்களிப்புகளை கௌரவிப்பதை இந்த தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 1939 ஆம் ஆண்டில் அரசின் பிரதிநிதிகளின் காவல்துறை என நிறுவப்பட்டது, பின்னர் 1949 ஆம் ஆண்டில் மத்திய சேமக் காவல் படை (CRPF) என மறுபெயரிடப் பட்டது.
- இது உள்துறை அமைச்சகத்தின் (MHA) கீழ் இயங்கும் இந்தியாவின் மிகப்பெரிய மத்திய ஆயுதக் காவல் படையாகும் (CAPF).
- கிளர்ச்சி எதிர்ப்பு, நக்சல் எதிர்ப்பு நடவடிக்கைகள், கலவரக் கட்டுப்பாடு, உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றில்

CRPF முக்கியப் பங்காற்றுகிறது.

- 2,255-க்கும் மேற்பட்ட CRPF வீரர்கள் சேவையில் தங்கள் இன்னுயிரை நீத்துள்ளனர், அசோக சக்ரா, கீர்த்தி சக்ரா மற்றும் சௌர்யா சக்ரா போன்ற வீரதீர விருதுகளைப் பெற்று கௌரவிக்கப்பட்டுள்ளனர்.




## உலக கல்லீரல் அழற்சி தினம் 2026 - ஜூலை 28




- வைரஸ் ஹெபடைடிஸ்/வைரஸ் தொற்றால் ஏற்படும் கல்லீரல் அழற்சி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், அதனைத் தடுத்தல், பரிசோதித்தல், சிகிச்சை அளித்தல் மற்றும் முற்றிலுமாக ஒழிப்பதை ஊக்குவிப்பதையும் இந்த தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஹெபடைடிஸ் பி வைரஸைக் (HBV) கண்டுபிடித்து, அதற்கான முதல் நோயறிதல் பரிசோதனை மற்றும் தடுப்பூசியை உருவாக்கிய டாக்டர் பரூச் ப்ளம்பெர்க் அவர்களின் பிறந்த தினத்தில் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- இது 2008 ஆம் ஆண்டில் உலக ஹெபடைடிஸ் கூட்டணியால் (WHA) முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது மற்றும் 2010 ஆம் ஆண்டில் உலக சுகாதார சபையால் (WHA) உலக சுகாதார அமைப்பின் (WHO) உலகளாவிய சுகாதார தினமாக அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.

- ஹெபடைடிஸ் (கல்லீரல் அழற்சி) என்பது முக்கியமாக Hepatitis A, B, C, D, and E வைரஸ்களால் ஏற்படும் கல்லீரலின் வீக்கமாகும்.
- தடுப்பூசி, பரிசோதனை மற்றும் சிகிச்சை மூலம் 2030 ஆம் ஆண்டிற்குள் பொதுச் சுகாதார அச்சுறுத்தலாக விளங்கும் வைரஸ் ஹெபடைடிஸ்/வைரஸ் தொற்றால் ஏற்படும் கல்லீரல் அழற்சி முற்றிலுமாக ஒழிப்பதை உலக சுகாதார அமைப்பு (WHO) நோக்கமாகக் கொண்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★